INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

DIGITAL SKILLS for LIFE

இணையவழித் தளங்களில் தொடர்புகொள்ளுதல்

# உடனடி செய்திப் பரிமாற்றம்





கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்து இணையவழித் தொடர்புத் தளங்களை கற்றுக்கொள்ளலாம்

இதற்கான ஆதரவு
DIGITAL FOR LIFE
PLAY IT FORWARD
SMART NATION SINGAPORE

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முகப்புரை | 2 |
| சைபர் பாதுகாப்பு உதவிக்குறிப்புகள் | 3 |
| உடனடி செய்திப் பரிமாற்றச் செயலிகளைப் புரிந்துகொள்ளுதல் | 4 |
| உடனடி செய்திப் பரிமாற்றச் செயலிகளைப் பயன்படுத்துவதன் பொதுவான படிநிலைகளுக்கு இட்டுச் செல்லுதல் | 9 |
| WhatsApp பயன்படுவதன் படிப்படியான வழிகாட்டுதல்கள் | 20 |

# முகப்புரை

வாழ்க்கைக்குத் தேவையான டிஜிட்டல் திறன்கள் (DSL) வழிகாட்டிப் புத்தகம் என்பது தினசரி வாழ்க்கைக்குத் தேவையான டிஜிட்டல் திறன்களைக் கற்றுக்கொள்ள உதவும் சிற்றேடுகளின் தொகுப்பாகும். இது, டிஜிட்டல் உலகில் நீங்கள் நம்பிக்கையுடனும் பாதுகாப்புடனும் இருப்பதற்காக நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியபடிப்படியான வழிமுறைகள் மற்றும் விரைவான உதவிக்குறிப்புகளைப் பற்றி விளக்குகிறது.

தினசரி வாழ்க்கைக்குத் தேவைப்படும் டிஜிட்டல் திறன்களை கற்றுக்கொள்ள விரும்பும் அனைவருக்காகவும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.


இந்த DSL திறன்கள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளபடி 5 திறன்களைக் கொண்ட பகுதிகளாகப் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன.

**கற்றல் விளைவுகள்:**

இந்த வழிகாட்டிக் கையேடு ‘இணையவழித் தளங்களில் தொடர்புகொள்ளுதல்’ திறன் மீது கவனம் செலுத்துகின்றது, இதில் நீங்கள் கற்றுக்கொள்வது:

- பொதுவான உடனடி செய்திப் பரிமாற்றச் செயலிகள், அவற்றின் ஐகான்கள் மற்றும் அவற்றின் சின்னங்களைப் பயன்படுத்தி அவற்றை அடையாளம் கண்டறிதல்.
- உடனடி செய்திப் பரிமாற்றச் செயலிகளைப் பயன்படுத்துவதன் பொதுவான அம்சங்கள் (UI) மற்றும் பொதுவான படிகள் (UX).
- இணையதளத்தில் பாதுகாப்பாக இருப்பதற்கான பயனுள்ள இணையவழிப் பாதுகாப்புக் குறிப்புகள்.

நீங்கள் கற்றல் பயனைப் பெறுவதற்கு உதவும் வகையில், இந்த வழிகாட்டி கையேடானது. மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள மின்னஞ்சல் தளங்களைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகளைக் காட்டுவதற்கு வெவ்வேறு மின்னஞ்சல் தளங்களை எடுத்துக்காட்டுகளாகப் பயன்படுத்துகிறது.




இந்த வழிகாட்டி பொதுவான மென்பொருள் சின்னங்கள் மற்றும் மொபைல் சாதன அமைப்புகளை அடிப்படையாகக் கொண்டது. சில அம்சங்கள் மற்றும் பயனர் இடைமுகம் வெவ்வேறு கைப்பேசிகளின் வேறுபடக்கூடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

# சைபர் பாதுகாப்பு உதவிக்குறிப்புகள்

உடனடி செய்தி அனுப்பும் செயலிகளைப் பயன்படுத்தும் போது பாதுகாப்பாக இருக்க, பின்வருவனவற்றைக் கடைபிடிக்கவும்:



அறியப்படாத ஆதாரங்களிலிருந்து வரும் சரிபார்க்கப்படாத இணைப்புகள் அல்லது இணைப்புக்கோப்புகளைத் திறக்கவோ பதிவிறக்கவோ **வேண்டாம்.**




தனிப்பட்ட அல்லது நிதி தொடர்பான விவரங்கள், கடவுச்சொற்கள் அல்லது ஒரு முறை கடவுச்சொல்லை (OTPஐ) யாருடனும் பகிர்ந்து கொள்ள **வேண்டாம்.**




நீங்கள் கோராத உரையாடல்களை அனுப்பும் அறியாத பயனர்களைத் **தடுத்துவிடவும்.**




**இரு காரணி அங்கீகாரத்தை (2FA) இயக்கவும்.**




அறியப்பட்ட பாதுகாப்புப் பாதிப்புகளில் இருந்து உங்கள் சாதனங்களைப் பாதுகாக்க, புதுப்பிப்புகளைச் சரிபார்த்து, **உங்கள் செயலியை உடனடியாகப் புதுப்பிக்கவும்.**




**அதிகாரப்பூர்வ** ஆதாரங்களில் இருந்து செயலிகளைப் பதிவிறக்கவும்.

# உடனடி செய்திப் பரிமாற்றச் செயலிகளைப் புரிந்துகொள்ளுதல்


| | |
|---|---|
| உடனடி செய்திப் பரிமாற்றச் செயலிகள் பற்றி | பக்கம் 5 |
| பல்வேறு உடனடி செய்திப் பரிமாற்றச் செயலிகளில் காணப்படும் பொதுவான அம்சங்கள் | பக்கம் 6 |

# உடனடி செய்தி அனுப்புதல் பற்றிய விளக்கம்

WhatsApp மற்றும் Telegram போன்ற உடனடி செய்தி அனுப்பும் (IM) செயலிகள், இணையத்தில் அழைப்புகள், நிகழ்நேர செய்திகள் மற்றும் கோப்புகளின் பரிமாற்றங்களை அனுமதிக்கின்றன. உடனடி செய்தி அனுப்பும் செயலிகளின் தகவல் தொடர்பு பொதுவாக நன்கு அறிந்த பயனர்களிடையே இருக்கும்.

இணைய இணைப்பு இருக்கும் வரை, உடனடி செய்தி அனுப்பும் செயலிகள் மூலம், மக்கள் செய்திகளை அனுப்பியும், அழைப்புகள் செய்தும் உலகம் முழுவதிலும் இணைந்திருக்க முடியும்.

### செயலியைக் கற்றுக்கொள்வதற்கு முன்பு தேவையானவை


### கற்பவரிடம் பின்வருபவை கண்டிப்பாக இருக்க வேண்டும்:

- வேலை செய்யும் புகைப்படக்கருவியுடன் மொபைல் போன் (iOS அல்லது Android) வைத்திருக்க வேண்டும், அது செல்லுலார் நெட்வொர்க் அல்லது Wi-Fi உடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- மொபைல் சாதனத்தில் செயலியை எவ்வாறு நிறுவுவது என்பதை அறிந்திருக்க வேண்டும்.
- iPad இல் WhatsApp ஐப் பயன்படுத்த ஸ்மார்ட்ஃபோன் (iOS/Android) வைத்திருக்க வேண்டும் [iPad பயனர்களுக்கு மட்டும்].

குறிப்பு: iPadக்கு WhatsApp செயலி இல்லை. இருப்பினும், உங்கள் iPhone/Android ஃபோனில் உள்ள WhatsApp ஐ iPad இன் WhatsApp Web உடன் இணைப்பதன் மூலம் iPadல் WhatsApp Web ஐப் பயன்படுத்தலாம்.




WhatsApp






Telegram

# வெவ்வேறு உடனடி செய்தி அனுப்பும் செயலிகள் உள்ள பொதுவான அம்சங்கள்


| **WhatsApp** | **Telegram** |
|---|---|


ஒரு தொடர்பு இணையத்தில் இருந்தால், கடைசியாக அந்தத் தொடர்பு WhatsApp-ஐப் எப்போது பயன்படுத்தினார் என்பதைக் காணவும்.




குரல் மற்றும் காணொளி அழைப்புகளைச் செய்யவும்.




# வெவ்வேறு உடனடி செய்தி அனுப்பும் செயலிகள் உள்ள பொதுவான அம்சங்கள்


**WhatsApp** | **Telegram**


தனிநபர்கள் அல்லது குழுவிற்குக் குறுஞ்செய்திகளை அனுப்பவும்.













# வெவ்வேறு உடனடி செய்தி அனுப்பும் செயலிகள் உள்ள பொதுவான அம்சங்கள்

| WhatsApp | Telegram | |
|---|---|---|
|  |  | **அனுப்புவதற்கான சின்னம்**<br>ஒரு குறுஞ்செய்தியை அனுப்பவும். |
|  |  | **பேப்பர் கிளிப் சின்னம்**<br>ஒரு படம், காணொளி அல்லது ஆவணத்தை இணைக்கவும். |
|  |  | **ஒலிவாங்கி சின்னம்**<br>ஒரு குரல் செய்தியை அனுப்பவும். |
|  |  | **ஸ்மைலி சின்னம்**<br>ஓர் இமோஜியைச் சேர்க்கவும். |
|  |  | **ட்ராஷ்பின் சின்னம்**<br>செய்தி அல்லது உரையாடலை நீக்கவும். |


# உடனடி செய்திப் பரிமாற்றச் செயலிகளைப் பயன்படுத்துவதன் பொதுவான படிநிலைகளுக்கு இட்டுச் செல்லுதல்


| | |
|---|---|
| தொடர்புகளைச் சேர்ப்பது எப்படி | பக்கம் 10 |
| ஒரு தனிநபருடன் ஒரு சாட் தொடங்குவது எப்படி | பக்கம் 11 |
| ஒரு செய்திக்குப் பதிலனுப்புவது எப்படி | பக்கம் 13 |
| ஒரு செய்தியை மேலனுப்புவது எப்படி | பக்கம் 14 |
| ஈமோஜிகளை அனுப்புவது எப்படி | பக்கம் 15 |
| ஒரு செய்திக்கு எதிர்வினை அளிப்பது எப்படி | பக்கம் 16 |
| இணைப்புகளைப் பகிர்வது எப்படி | பக்கம் 17 |
| ஆடியோ மற்றும் வீடியோ கருவிகளைப் பயன்படுத்துவது எப்படி | பக்கம் 18 |
| ஒரு செய்தியை நீக்குவது எப்படி | பக்கம் 19 |


# உடனடி செய்தி அனுப்பும் செயலிகளைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகள் - "தொடர்புகள்"-ஐச் சேர்க்கவும்

மீது தட்டவும். "புதிய தொடர்பு" / "New Contact" என்பதைத் தேர்ந்தெடுத்து, விவரங்களை நிரப்பவும், பின்னர் "சேமிக்கவும்" அல்லது "தொடர்பை உருவாக்குக" என்பதைத் தட்டவும்.

**WhatsApp**





**Telegram**




# உடனடி செய்தி அனுப்பும் செயலிகளைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகள் - ஒரு தனிநபருடன் உரையாடலைத் தொடங்கவும்


**1** மீது தட்டவும், பின்னர் ஒரு தொடர்பின் மீது தட்டவும்.


**WhatsApp**




**Telegram**





# உடனடி செய்தி அனுப்பும் செயலிகளைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகள் - ஒரு தனிநபருடன் உரையாடலைத் தொடங்கவும்

**2** உங்கள் செய்தியை உள்ளிட்டு "அனுப்பு" சின்னத்தைத் தட்டவும்.

**WhatsApp**





**Telegram**




# உடனடி செய்தி அனுப்பும் செயலிகளைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகள் - ஒரு செய்திக்குப் பதிலளிக்கவும்

**ஒரு செய்தியைத் தட்டிப் பிடித்துக்கொள்ளவும். -சின்னத்தைத் தட்டி, உங்கள் உரையை உள்ளிட்டு "அனுப்பு" சின்னத்தைத் தட்டவும்.**

**WhatsApp**





**Telegram**




# உடனடி செய்தி அனுப்பும் செயலிகளைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகள் - ஒரு செய்தியை முன்னோக்கி அனுப்பவும்

ஒரு செய்தியைத் தட்டிப் பிடித்துக் கொள்ளவும், பின்னர் [forward icons] -ஐ தட்டவும்.

**WhatsApp**





**Telegram**




# உடனடி செய்தி அனுப்பும் செயலிகளைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகள் - இமோஜிகளை அனுப்பவும்

 சின்னத்தைத் தட்டவும், பின்னர் இமோஜியைத் தேர்ந்தெடுக்கவும். இமோஜியை அனுப்ப "அனுப்பு" என்பதைத் தட்டவும்.

**WhatsApp**





**Telegram**




# உடனடி செய்தி அனுப்பும் செயலிகளைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகள் - ஒரு செய்திக்குப் பதிலளியுங்கள்

**செய்தியைத் தட்டிப் பிடித்துக் கொள்ளவும், பின்னர் இமோஜியைத் தேர்ந்தெடுக்கவும். கூடுதல் விருப்பத் தேர்வுகளுக்கு "+" அல்லது ⌄ -ஐத் தட்டவும்.**

## WhatsApp




## Telegram





# உடனடி செய்தி அனுப்பும் செயலிகளைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகள் - இணைப்புகளைப் பகிரவும்




சின்னம் மீது தட்டவும். நீங்கள் அனுப்ப விரும்பும் இணைப்பைத் தேர்ந்தெடுக்கவும்.


## WhatsApp




## Telegram








# உடனடி செய்தி அனுப்பும் செயலிகளைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகள் - ஒலி மற்றும் காணொளி கருவிகளைப் பயன்படுத்தவும்


தொலைபேசி அல்லது காணொளி அழைப்பைச் செய்ய சின்னம் அல்லது சின்னத்தைத் தட்டவும். குரல் செய்தியைப் பதிவுசெய்ய சின்னத்தைத் தட்டிப் பிடித்துக் கொள்ளவும். சின்னத்தை விடுவித்து குரல் செய்தியை அனுப்பவும்.


## WhatsApp




## Telegram





# உடனடி செய்தி அனுப்பும் செயலிகளைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகள் - ஒரு செய்தியை நீக்கவும்

**ஒரு செய்தியைத் தட்டிப் பிடித்துக் கொள்ளவும், பின்னர் சின்னத்தைத் தட்டவும்.**

**WhatsApp**




**Telegram**



# WhatsApp பயன்படுவதன் படிப்படியான வழிகாட்டுதல்கள்

# WhatsApp கண்கக்கிற்குப் பதிவு செய்தல்


## 1 WhatsApp செயலியைத் துவக்கவும்

Apple App Store அல்லது Google Play Store இலிருந்து **“WhatsApp செயலியைப்”** பதிவிறக்கம் செய்து அதைத் துவக்கவும்.


## 2 சேவை விதிமுறைகளை ஏற்கவும்





## 3 தொலைபேசி எண்ணை உறுதிப்படுத்தவும்




## 4 6 இலக்கக் குறியீட்டை உள்ளிடவும்




## 5 அணுகலை அனுமதிக்கவும்




உங்கள் தொடர்புகள், புகைப்படங்கள், மீடியா மற்றும் கோப்புகளை அணுகுவதற்கு WhatsApp ஐ அனுமதிக்க "**ஆப்ஸைப் பயன்படுத்...**" என்பதைத் தட்டவும்.


## 6 சுயவிவரத் தகவலை உள்ளிடவும்




உங்கள் பெயரை உள்ளிட்டு (விரும்பினால்) சுயவிவரப் புகைப்படத்தை வழங்கி, "**அடுத்து**" என்பதைத் தட்டவும்.


# அமைப்புகளை நிர்வகித்தல்

**1** **அமைப்புகள் என்பதைத் தட்டவும்**




**"அமைப்புகள்"** என்பதில் உள்ள 3-புள்ளிகள் மெனுவைத் தட்டவும்.


**2** **விருப்பமான அமைப்புகளை அமைக்கவும்**



# இரு-படிநிலை சரிபார்ப்பை அமைத்தல்




## 1 இரண்டடுக்குச் சரிபார்ப்பைத் தேர்ந்தெடுக்கவும்





**"அமைப்புகள்"** என்பதன் கீழ் **"கணக்கு"** என்பதற்குச் சென்று **"இரண்டடுக்குச் சரிபார்ப்பு"** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

## 2 இரு-படிநிலை சரிபார்ப்பை இயக்கவும்




6 இலக்க PIN ஐ உருவாக்க, **"இயக்கு"** என்பதைத் தட்டி, செயலியில் வரும் வழிமுறைகளைப் பின்பற்றவும். (விரும்பினால்) மின்னஞ்சலைச் சேர்ப்பதன் மூலம் உங்கள் PIN ஐ மறந்துவிட்டால் அதை மீட்டமைக்கலாம். மின்னஞ்சலைச் சேர்க்க விரும்பவில்லை என்றால் **"தவிர்க்கவும்"** என்பதைத் தட்டவும்.

## 3 இரு-படிநிலை சரிபார்ப்பு செயல்படுத்தப்பட்டது




**"முடிந்தது"** என்பதைத் தட்டவும், உங்கள் இரு-படிநிலை சரிபார்ப்பு இயக்கப்பட்டுவிட்டது.


# iPad இல் WhatsApp

## 1 iPad இல் Safari உலாவியைத் திறக்கவும்




உங்கள் iPad இல் Safari உலாவியைத் திறக்க தட்டி, **web.whatsapp.com** என்பதற்குச் செல்லவும்.

## 2 இணைக்கப்பட்ட சாதனங்களைத் தேர்ந்தெடுக்கவும்




உங்கள் ஸ்மார்ட்போனில் (iOS/Android) WhatsApp ஐத் திறந்து மெனு என்பதைத் தட்டவும். "**இணைத்த சாதனங்கள்**" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

## 3 சாதனத்தை இணைக்கவும் என்பதைத் தட்டவும்




**"சாதனத்தை இணை"** என்பதைத் தட்டவும்.


## 4 QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்




ஸ்மார்ட்போனுடன் இணைக்க iPad இல் QR குறியீட்டை ஸ்கேன் செய்து, உங்கள் iPad இல் WhatsApp செயலியைப் பயன்படுத்தத் தொடங்கலாம்.


# தொடர்புகளைச் சேர்த்தல் - WhatsApp வழியாக (iOS)

**1** தொடர்புகளைச் சேர்க்கவும்




WhatsApp உரையாடலில், **"புதிய உரையாடல்"** சின்னத்தைத் தட்டவும்.

**2** புதிய தொடர்பைத் தேர்ந்தெடுக்கவும்





**"New Contact"** என்பதைத் தேர்ந்தெடுத்து விவரங்களை நிரப்பவும். **"சேமிக்கவும்"** என்பதைத் தட்டவும்.

# தொடர்புகளைச் சேர்த்தல் - WhatsApp வழியாக (ஆAndroidடு)




**1** **தொடர்புகளைச் சேர்க்கவும்**




WhatsApp உரையாடலில், **“புதிய உரையாடல்”** சின்னம் மீது தட்டவும்.


**2** **புதிய தொடர்பு என்பதைத் தேர்வு செய்யவும்**





**"புதிய தொடர்பு"** என்பதைத் தேர்ந்தெடுத்து விவரங்களை நிரப்பவும். **"Save"** என்பதைத் தட்டவும்.

# ஒரு நபருக்கு ஒரு செய்தியை அனுப்பவும்

**1** புதிய உரையாடலைத் தொடங்க புதியஉரையாடல் சின்னத்தைத்தட்டவும்





**2** தொடர்பைத் தேர்ந்தெடுக்கவும்





மாற்றாக, ஏற்கனவே உள்ள ஒரு உரையாடலைத் தேர்ந்தெடுக்கவும்.

**3** செய்தி பெட்டியில் உரையை உள்ளிடவும். அனுப்பு சின்னத்தைத் தட்டவும்.




# செய்திக்குப் பதிலளித்தல்

1 செய்தியின் மீது தட்டி,சற்று நேரம் பிடிக்கவும். பதில் சின்னத்தைத் தட்டவும்.





ஒரு குறிப்பிட்ட செய்திக்குப் பதிலளிக்கவும்.

2 செய்திப் பெட்டியைத் தட்டி, அதில் தட்டச்சு செய்யவும். அனுப்புக சின்னத்தைத் தட்டவும்.




# செய்தியைப் பிறருக்கு அனுப்புதல்


**1** செய்தியின் மீது தட்டி, சற்று நேரம் பிடிக்கவும்




**2** பிறருக்கு அனுப்பும் சின்னத்தைத் தட்டவும்





**3** தொடர்பைத் தேர்ந்தெடுக்கவும்





தொடர்பைத் தேர்ந்தெடுத்து **"அனுப்புக"** சின்னத்தைத் தட்டவும்.

# ஈமோஜிகளை அனுப்புதல்


1 ஸ்மைலி சின்னத்தைத் தட்டவும்




2 ஈமோஜிகளைத் தேர்ந்தெடுக்கவும்





3 அனுப்புக சின்னத்தைத் தட்டவும்




# செய்திக்கு எதிர்வினையளித்தல்

**1** செய்தியின் மீது தட்டி, சற்று நேரம் பிடிக்கவும்





**2** ஈமோஜியைத் தேர்ந்தெடுக்கவும்




கூடுதல் விருப்பத் தேர்வுகளுக்கு ஈமோஜியைத் தேர்ந்தெடுக்கவும் அல்லது "+" மீது தட்டவும்.


**3** ஈமோஜிக்கு எதிர்வினையளிக்கவும்





செய்தியின் கீழே ஈமோஜி தோன்றும்.

# இணைப்புக்கோப்புகளைப் பகிருதல்

**1** பேப்பர்கிளிப் சின்னத்தைத் தட்டவும்





**2** இணைப்புக்கோப்பு வகையைத் தேர்ந்தெடுக்கவும்




# செய்தியை நீக்குதல்

**1** **செய்தியின் மீது தட்டி, சற்று நேரம் பிடிக்கவும்**





நீங்கள் நீக்க விரும்பும் செய்தியைத் தட்டி, சற்று நேரம் பிடிக்கவும்.

**2** **குப்பைத் தொட்டி சின்னத்தைத் தட்டவும்**





**3** **செய்தியை நீக்கவும்**




# ஒலி மற்றும் காணொளி கருவிகளைப் பயன்படுத்துதல்

## 1 தொலைபேசி அழைப்புகளைச் செய்யவும்





**"தொலைபேசி"** சின்னத்தைத் தட்டவும்.

## 2 காணொளி அழைப்புகளைச் செய்யவும்




**"காணொளி"** சின்னத்தைத் தட்டவும்.

## 3 குரல் செய்திகளை அனுப்பவும்





ஒலிப்பதிவைத் தொடங்க **"ஒலிவாங்கி"** சின்னத்தைத் தட்டி, சற்று நேரம் பிடிக்கவும், குரல் செய்தியை அனுப்ப அந்த சின்னத்தை விடுவிக்கவும்.


# தொலைபேசி/காணொளி அழைப்புகளை எடுத்துப் பேசுதல்

**1** மொபைல் சாதனம் பூட்டப்பட்டிருக்கும் போது, தொலைபேசி அல்லது காணொளி அழைப்புகளை ஏற்க, மேலே ஸ்வைப் செய்யவும்

**A**





**B**





**2** மொபைல் சாதனம் பூட்டப்படாதபோது, தொலைபேசி அல்லது காணொளி அழைப்புகளுக்குப் பதிலளிக்கவும்

**A**





**B**




# உரையாடலை நீக்குதல்

**1** 3-புள்ளிகள் மெனுவில் தட்டவும்





"**மேலும்**" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

**2** அரட்டையை அழி என்பதைத் தேர்ந்தெடுக்கவும்





**3** அரட்டையை அழி என்பதைத் தட்டவும்



# உரையாடலைத் தடுத்துப் புகாரளிக்கவும்

**1** **உங்கள் தொடர்புப் பட்டியலில் இல்லாத அனுப்புநரைத் தடுக்கவும்/புகாரளிக்கவும்**




நீங்கள் தடுக்க/புகாரளிக்க விரும்பும் செய்தியைத் தேர்ந்தெடுக்கவும்.





தொடர்பு நபர் உங்களை அழைப்பதை/உங்களுக்குச் செய்தி அனுப்புவதைத் தடுக்க **"தடு"** என்பதைத் தட்டவும், மேலும் உங்கள் உரையாடல் WhatsApp இலிருந்து நீக்கப்படும்.

மதிப்பாய்வு செய்வதற்காகத் தொடர்பு நபர் Whatsapp இல் அனுப்பிய கடைசி 5 செய்திகளை அனுப்ப **"தடு"** என்பதைத் தட்டவும், அதன் பிறகு தொடர்பு தானாகவே தடுக்கப்படும்.


## 2 உங்கள் தொடர்புப் பட்டியலில் உள்ள அனுப்புநரைத் தடுத்தல்/புகாரளித்தல்

A





3-புள்ளிகள் மெனுவைத் தட்டவும், பின்னர் **"மேலும்"** என்பதைத் தட்டவும். **"புகாரளி"** அல்லது **"தடு"** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

B




**"புகாரளி"** என்பதைத் தட்டவும்.


C




அல்லது **"தடு"** என்பதைத் தேர்வு செய்யவும்.


# கணக்கை நீக்குதல்

## 1 கணக்கு என்பதைத் தேர்ந்தெடுக்கவும்




**"அமைப்புகள்"** என்பதன் கீழ் **"கணக்கு"** என்பதைத் தேர்ந்தெடுக்கவும.

## 2 கணக்கை நீக்குதல்





**"கணக்கை நீக்கு"** என்பதைத் தட்டி, உங்கள் தொலைபேசி எண்ணை முழு சர்வதேச வடிவத்தில் உள்ளிட்டு, **"கணக்கை நீக்கு"** என்பதைத் தட்டவும். ஆண்ட்ராய்டு சாதனங்களைப் பொறுத்தவரையில், நீங்கள் ஒரு காரணத்தைத் தேர்ந்தெடுத்து, **"கணக்கை நீக்கு"** என்பதைத் தட்ட வேண்டும்.

**குறிப்பு:** உங்கள் WhatsApp கணக்கை நீக்குவது:


- WhatsApp இலிருந்து உங்கள் கணக்கை நீக்கிவிடும்.
- உங்கள் செய்தி வரலாற்றை அழித்துவிடும்.
- உங்கள் எல்லா WhatsApp குழுக்களில இருந்தும் உங்களை நீக்கிவிடும்.
- உங்கள் செய்தி வரலாற்றின் காப்புப்பிரதியை நீக்கிவிடும்.

# குழுவின் தனியுரிமை அமைப்புகளை மாற்றவும்


**1** அமைப்புகளைத் தேர்ந்தெடுக்கவும்





**2** தனியுரிமையைத் தேர்ந்தெடுக்கவும்




**3** குழுக்களைத் தேர்ந்தெடுக்கவும்




**4** **இவர்களை தவிர என்பதைத் தேர்ந்தெடுக்கவும்**




**"இவர்களை தவிர"** என்பதைத் தேர்ந்தெடுத்தால் குழுக்களில் சேர்க்க விரும்பாதவர்கள் உள்ளார்களா என்பதைச் சரிபார்க்கவும்

**5** **விலக்குவதற்குத் 'தொடர்புகள்' என்பதைத் தேர்ந்தெடுக்கவும்**



# குறிப்புகள்

# குறிப்புகள்

# குறிப்புகள்

**கூடுதல் தகவலுக்கு மற்றும் உங்கள் அருகிலுள்ள சிங்கப்பூர் மின்னிலக்க சமூக நடுவத்தைக் கண்டறிய:**

**IMDA தொடர்பு மையம்**

**ஹாட்லைன்:** +65 6377 3800
**கருத்தைத் தெரிவியுங்கள்:** go.gov.sg/imda-feedback
**இணையத்தளம்:** digitalforlife.gov.sg

**QR குறியீட்டை ஸ்கேன் செய்து வாழ்நாள் மின்னிலக்கமயத்திற்க்கு செல்லவும்**

© 2026 தகவல்தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையம். அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆதாரத்தின் எந்தப் பகுதியையும் IMDA வின் வெளிப்படையான ஒப்புதல் இல்லாமல் பயன்படுத்தவோ நகலெடுக்கவோ கூடாது. இந்த வழிகாட்டியுடன் தொடர்புடைய ஆவணங்களின் பதிப்புரிமை பாதுகாப்பிற்கு உட்பட்டதாக இருக்கலாம். இவற்றுள் பின்வருபவையும் அடங்கும்: ஆவணங்கள், ஸ்லைடுகள், படங்கள், ஒலி மற்றும் காணொளி. காப்புரிமை பெற்ற பொருட்களை அங்கீகாரம் இல்லாமல் வைத்திருப்பது, நகல் எடுப்பது, விநியோகம் செய்வது அல்லது மாற்றியமைப்பது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த ஆதாரவளம் Meta மற்றும் Telegram-இன் இயங்குதளங்களில் பொதுவில் கிடைக்கும் உள்ளடக்கத்திலிருந்து சான்றைப் பெறுகிறது.